**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 292/2012**

**Witness PW 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | சாதி | |
| த/பெ | இருசன் | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம்; | | வயது | |
| | | தேதி | 06.12.2023 |

இன்று (06.12.2023) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

வழக்கு விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மண் வேண்டும் என்று வழக்கிட்டுள்ளேன். முதன்மை சாட்சியத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். நான் தமிழில் தான் கையெழுத்து போடுவது வழக்கம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ 6 ல் மாற்றுச் சான்றிதழில் என்னுடைய கையெழுத்து ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் கையெழுத்து தமிழிலும் ஆங்கிலத்திலும் போடுவேன். வா.த.சா.ஆ 6 டியூப்ளிக்கேட் நகல் என்றால் சரிதான். அசல் கடலூர் சென்ற போது தொலைந்துவிட்டது அதனால் பள்ளியில் நகல் கேட்டு விண்ணப்பிததற்கு வா.த.சா.ஆ 6 வழங்கினார்கள். கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்த மனுவுடன் நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் பள்ளி மாற்றுச் சான்றிதழ் எனது வீட்டில் தொலைந்து போய்

மீண்டும் கிடைத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் கருமாதி பத்திரிக்கை மட்டும் தான் கிடைத்ததாக சொல்லியுள்ளேன். பள்ளி மாற்றுச் சான்றிதழ் எந்த ஆண்டு தொலைந்து போனது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். புகார் கொடுத்ததாக வழக்கில் சொல்லாமல் தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ளேன். நான் எது வரை படித்துள்ளேன் என்றால் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த வருடம் நான் பள்ளி படிப்பை முடித்தேன் என்றால் 1996 ல் பாதியில் நின்றுவிட்டேன். பள்ளி மாற்றுச் சான்றிதழ் எந்த வருடம் வாங்கினேன் என்றால் 1998 ல் வாங்கினேன். தொலைந்த பிறகு டியூப்ளிக்கேட் வாங்கியுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள மாற்றுச் சான்றிதழ் இந்த வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

I Additional Subordinate Judge,
Villupuram